1989 ஏப்ரல் 26] [டாக்டர் மு. கருணாநிதி]

பார்த்தபோது ஆரஞ்சுப் பழத்தை உரித்து இரண்டு சுளைகளைக் கொடுத்ததாகவும், அதுதான் அங்கே நடந்தது என்றும் ஜெயில் அதிகாரிகள் சொல்கின்றார்கள்.

பழம் பிழிந்து கொடுத்து, ஆரஞ்சு சாறைப் பருகச் சொல்லி உண்ணாவிரதத்தை சிறைச்சாலைக்குள்ளே முடிக்கச் சொல்ல வில்லை. பத்திரிகையிலே வந்திருக்கின்ற செய்தி தவறானது. ஒன்று பேட்டி தவறாக இருக்கவேண்டும் அல்லது பத்திரிகை யாளர்கள் தவறாகப் பிரசுரித்திருக்க வேண்டும். சிறை அதிகாரி கள் எந்தத் தவறும் செய்யவில்லை.

5. கவன ஈர்ப்பு.

(அ) மதுரை மாவட்டத்தில் பல அரிசி ஆலைகள் மூடப்பட்டுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன், எஸ். டி. உகம்சந்த், வி. கே. சின்னசாமி மற்றும் கே. ஏ. செங்கோட்டையன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் அதை மாண்புமிகு உணவு அமைச்சர் அவர் களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்பு மிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டத்தில் சுமார் 200 அரிசி ஆலைகள் காலவரையறையின்றி மூடப்பட்டுள்ள தால் 6 ஆயிரம் தொழிலாளர்கள் வேலையிழந்துள்ள நிலைமை குறித்தும், ஆலைகள் மூடப்பட்டுள்ளதால் மதுரை மாவட்டத்தி லும், அண்டை மாவட்டத்திலும் அரிசி விலை உயர்வால் பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பும் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவு அமைச் சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:—

அறிக்கை.

மதுரை மாவட்டத்தில் 4—4—1989-ஆம் நாளிலிருந்து கீழ்க் கண்ட கோரிக்கைகளுக்காக அரிசி ஆலை அதிபர்களால் "அரிசி ஆலைகள் ஸ்டிரைக்" என்று தெரிவிக்கப்பட்டது.

(1) லெவி கொடுக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தக் கூடாது ;

(2) வெளி மாநில நெல் மற்றும் அரிசியை இதர மாவட்டங்களுக்குக் கட்டுப்பாடின்றி கொண்டு போவதற்கு இயக்க அனுமதிச் சான்றிதழ் வழங்க வேண்டும் ; மற்றும்

(3) குடிமைப் பொருள் வழங்கல் போலீஸ் (குற்றப் புலனாய்வுத்துறை) கெடுபிடியை நிறுத்த வேண்டும்.

அரிசி ஆலைகள் ஸ்ட்ரைக் என்று அறிவிப்பு செய்தவுடன் மதுரை மாவட்ட ஆட்சியர் தக்க சமயத்தில் இந்த விஷயத்தில் தலையிட்டு 5—4—1989-ஆம் நாளன்று அரிசி ஆலை அதிபர்களிடம் விவாதித்ததினால் 6—4—1989 ஆம் நாள் காலையில் அரிசி ஆலைகள் ஸ்ட்ரைக் வாபஸ் பெறப்பட்டது. அனைத்து அரிசி ஆலைகளும் 4—4—1989 மற்றும் 5—4—1989 ஆம் நாட்களில் அரவை செய்வதைத் தவிர்த்து இயங்கி வந்தன. எனவே அரிசி ஆலைத் தொழிலாளர்களுக்கு பிரச்சினை ஏதும் ஏற்படவில்லை. ஸ்ட்ரைக் அறிவிப்பைப் பயன்படுத்திக் கொண்டு வியாபாரிகள் 4—4—1989 மற்றும் 5—4—1989 நாட்களில் ஒரு கிலோ அரிசிக்கு பத்து பைசாவிலிருந்து இருபது பைசா வரை விலையை உயர்த்தினார்கள். இவர்கள் கடுமையாக எச்சரிக்கப்பட்டார்கள். நிலைமை கட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. யாருக்கும் எவ்வித இடையூறும் இல்லாமல் சுமுகமாக ஸ்ட்ரைக் பிரச்சினை முடிக்கப்பட்டுவிட்டது.

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் செய்தியைக் கேட்ட உடனே, அங்கேயிருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அரிசி ஆலை அதிபர்களை அழைத்துப் பேசி முடித்துவிட்டதாகத் தகவல் கொடுத்திருக்கின்றார்கள். நன்றி. நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு சொல்லிக்கொள்வதெல்லாம், தமிழ்நாட்டிலே அரிசிப் பற்றாக்குறை அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே லெவி போன்றவைகளிலே பல இடங்களிலே பிரச்சினை இருந்து கொண்டிருக்கிறது. தொடர்ந்து பல இடங்களிலே பிரச்சினைகள் வரக் கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றன. இதுபோல வராமல் இனி மேல் அரசும், ஆலை அதிபர்களும் பிரச்சினைகள் வந்து இதிலே ஸ்ட்ரைக் என்று அறிவிப் பதற்கு முன்பு பேசித்தீர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே அரிசி ஆலை உரிமையாளர்கள், லெவி முறையை எடுத்துவிட வேண்டும் என்றும், அதனாலே அரசாங்கத்திற்குத் தேவையான உதவிகளைச் செய்வதாகவும் சொல்லி இருந்தார்கள். இன்றுள்ள கடுமையான அரிசிப் பஞ்சம், வறட்சி இவைகளை.எல்லாம் கருத்திலே கொண்டு அரிசி ஆலைகளுக்கு இதற்கு முன்பு இருந்த அரசு என்ன விதி

முறைகளை வகுத்துத் தந்திருக்கிறதோ அதே விதிமுறைகளைப்டு பின்பற்றித்தான் இன்றையதினம் லெவி முறை அமுல்படுத்தப்பட் வருகிறது. இருந்தாலும் மாவட்டம் விட்டு மாவட்டம் போகக் கூடிய உரிமை வேண்டுமென்று சொல்கின்றார்கள். அப்படிப் பட்ட உரிமை தருவதன் மூலம் இங்கேயுள்ள அரிசி கேரளாவிற்குப் போகக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஏனென்றால் அங்கே அரிசி யினுடைய விலை ரூபாய் 7-லிருந்து ரூபாய் 8 வரையிலே விற்றுக் கொண்டிருக்கிறது. கொள்ளை லாபம் அடிக்க வேண்டுமென்று நினைக்கின்ற வியாபாரிகள் கடத்துவதற்கு முயற்சி செய்கின் றார்கள். அப்படி நாம் அனுமதித்துவிட்டால், தமிழ்நாட்டிலே இன்னமும் அரிசிப் பஞ்சம் வரும். எனவேதான் அரசு இதிலே கண்டிப்பாக இருக்க வேண்டியிருக்கிறது. மழை பெய்து, நல்ல விளைச்சல் இருந்து உணவு தானியம் அதிகமாக அரசாங்கத்திடம் கையிருப்பிலே இருக்குமானால் இதைப்பற்றி அரசாங்கம் பரிசீலிக் கும்.

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்பு மிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், உங்கள் மூலமாக சொல்லிக் கொள்வதெல்லாம், வெளி மாநிலத்திலே இருந்து நெல் மற்றும் அரிசி இதர மாவட் டங்களுக்குக் கட்டுப்பாடு இன்றி போகவேண்டும் என்று கேட்டிருக்கின்றார்கள். கட்டுப்பாடு இல்லாமல் போவதற்கு எந்த அரசாங்கமும் அனுமதிக்க முடியாது. ஆனால் நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குச் சொல்வதெல்லாம் எங் கள் காலத்திலும் அரிசிப்பற்றாக்குறை இருந்தது. அந்த நேரத்தில் எல்லாம் வெளி மாநிலங்களிலிருந்து அரிசி ஆலை அதிபர்கள் குறிப்பாக ஆந்திரா போன்ற மாநிலங்களிலிருந்து அரிசி கொண்டு வர நாங்கள் தடையாக இருக்கவில்லை. அதுபோல கேரளா பார்டரில் இருக்கிற செக் போஸ்டுகளை எல்லாம் வலுப்படுத்தி யிருக்கிறோம். ஆனால் இன்றைக்கு இருக்கிற அரிசிப் பஞ்சத்தை மையமாக வைத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இது குறித்துத் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதே வெளி மாநிலங்களி லிருந்து இங்கு அரிசி கொண்டு வருகிறார்கள். அதற்கு அனுமதி சான்றிதழ் வழங்க இந்த அரசு முன்வந்தால் உடனே அதிலேயும் ஊழல் நடைபெற்றதாகக் குற்றச்சாட்டு வர வாய்ப்பிருக்கிறது. அதற்காகத்தான் யார் யார் வெளி மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டுக்கு, இந்த அரசாங்கத்திற்கு அரிசி கொண்டு வந்தா லும் அவர்களையும் அனுமதித்திருக்கிறோம். அப்படிப்பட்டவர் கள்மீது எந்த நடவடிக்கையையும் இந்த அரசு எடுப்பதில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.